# கன்ரபரி தமிழ்ச் சங்கம்

## ஆண்டறிக்கை 2018/2019



யாதும் ஊரே யாவரும் கேளிர்

CANTERBURY TAMIL SOCIETY
NEW ZEALAND (SINCE 1995)
"World is One, All are My Kin"

## அறிமுகம்

தொலைதூரம் பறந்து வந்து எழுவானருகில் நாம் கன்ரபரி தமிழ்ச் சங்கம் என்கின்ற ஓர் அன்புக்கூடு கட்டியிருக்கிறோம்.

நமது கன்ரபரி தமிழ்ச் சங்கம் சுமார் இருபது வருடங்களுக்கு முன்பு சில தமிழ் ஆர்வலர்களால் பூங்கா நகரில் தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில் சொற்ப உறுப்பினர்களால் நடப்பட்ட இந்தத் தமிழ்ச் சங்க நாற்று, காலப்போக்கில் பூத்துக் குலுங்கி, தனிமரம் தோப்பாகி, வலசை வரும் தமிழ்ப் பறவைகள் கூடிக் களிக்கும் ஒரு பசுமையான பூங்காவாகப் பரிணமித்துள்ளது.

செம்மொழியான நமது தமிழ்மொழியை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதும், நமது குழந்தைகளுக்கு தமிழார்வத்தை வளர்ப்பதும், தமிழ்க் கலாச்சாரத்தை தற்போதைய வாழ்க்கை முறையில் இணைப்பதுவுமே நமது கன்ரபரி தமிழ்ச் சங்கத்தின் நோக்கமாகும்.

## எங்கள் குறிக்கோள்

- தமிழ்மொழிக் கல்வி, கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய விளையாட்டுக்கள் ஆகியவற்றை ஊக்குவித்தல்.
- நியூசிலாந்து தமிழ்ச் சமூகத்துக்கும் பிற சமூகங்களுக்கும் இடையேயான உறவுகளைப் பலப்படுத்தல்.
- தமிழ்மொழி பேசும் சமூகங்களுடன் தொடர்புடைய மனிதாபிமானப் பணிகளுக்கு ஆதரவும் ஒத்தாசையும் வழங்குதல்
- சக சமூக அமைப்புகளுக்கும் நிவாரண அமைப்புகளுக்கும் உதவி செய்தல்

## பொதுக்கூட்டம் 2018

கன்ரபரி தமிழ்ச் சங்கத்தின் 2018-2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொதுக்கூட்டம் 2018 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 17 ஆம் திகதி சனிக்கிழமை 166 வைமாரி வீதி, ஐலத்திலுள்ள சனசமூகநிலையத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சங்க உறுப்பினர்களின் முழு ஆதரவுடன் பின்வரும் உறுப்பினர்கள் சங்கத்தின் 2018-2019 செயற்குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

- தலைவர்: திரு. சந்திரசேகரி தயாகரன்
- உபதலைவர்: திரு. பிரதீபன் ராஜேந்திரா
- செயலாளர்: திரு. சுரேந்திரன் சிவலிங்கம்
- பொருளாளர்: திருமதி. கிருபா ஜெகநாதன்

இந்த ஆண்டும் வழமை போன்று புதிய அங்கத்தவர்கள் கன்ரபரி தமிழ்ச்சங்கத்தில் இணைந்துகொண்டனர்.

இவ்வாண்டில், தமிழ்ச்சங்கத்தின் அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதிலேயே சங்கத்தின் செயற்குழு பல தடவைகள் எதிர்கொண்டது, ஒரு சில உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் நேரடியாகவும், மின்னஞ்சல் மூலமும் வேறுபட்ட அழுத்தங்களை பிரயோகித்தார்கள். இவ்வழுத்தங்களை நாம் மிகவும் பண்பட்ட முறையில் கன்ரபரி சமூகச்சட்ட(Community Law Canterbury) வழக்கறிஞர்களின் உதவியோடு கையாண்டோம். இச்சந்தர்ப்பத்தில் எமக்கு சட்ட ஆலோசனைகள் வழங்கிய வழக்கறிஞர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எமது யாப்புக்கு(constitution - clause 12) அமைவாக செயற்குழு உறுப்பினர்கள் தேர்வுக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஒரு வாரத்திற்கு முன்னர் உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும். இந்த வருடம் முதல் இதனை நாங்கள் நடைமுறைப்படுத்தி உள்ளோம், இதனையே எமது வழக்கறிஞர்கள் எமக்கு முதலாவது ஆலோசனையாக முன்வைத்தார்கள்.

**<u>சங்க நிகழ்வுகள்</u>**

2018/2019 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் பின்வரும் உள்ளக கலை கலாச்சார நிகழ்வுகள் மற்றும் வெளியக நிகழ்வுகள் நடைபெற்றது.

- தமிழ்ப் புத்தாண்டு
- குளிர்கால ஒன்றுகூடல்
- நவராத்திரி விழா
- தீபாவளி விழா
- மாவீரர் நாள்
- நத்தார் சுற்றுலா
- தைப்பொங்கல் விழா மற்றும் தமிழ் பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு
- டநீடின் தமிழ்ச் சங்கத்துடனான சிநேகபூர்வமான துடுப்பாட்ட மற்றும் ஒன்றுகூடல் நிகழ்வு
- தமிழர் பாரம்பரிய விளையாட்டுப் போட்டி.

இதனைவிட எமது சங்கத்தின் உறுப்பினர்களான நடன ஆசிரியர்கள் அனுராதா அம்பலவாணர் மற்றும் பவித்ரா மதுரம் கிறிஸ்து கல்லுரியில் (Christ college) நடைபெற்ற சர்வதேச வார நிகழ்ச்சியில் தரமான நடன நிகழ்ச்சிகளை வழங்கி இருந்தார்கள், அவர்களுக்கும் எமது நன்றிகள்.

மேலும் இம்முறை எமது பிரதேசத்தின் அரசியல் தலைவர்களுக்கு தமிழ்ச் சங்கத்தின் கலை கலாச்சார நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்து இருந்தோம், ஒரு கட்சி சார்பாக வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர் ஜோ அவர்களுக்கும், நேரமின்மை காரணமாக வருகை தர முடியாமல் வருத்தம் தெரிவித்த அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றிகள். இதனைவிட எமது நிகழ்வுக்கு வருகை தந்த கிறைஸ்ற்சேர்ச் நகர கவுன்சிலர் ஜிம்மி சென் அவர்களுக்கும் நன்றிகள். அவர் பின்பு எமது கலாசாலை புதிய வளாகத் திறப்பு விழாவிலும் கலந்து சிறப்பித்தார்.

இம்முறை நிகழ்வுகளுக்கான விண்ணப்பங்கள் இணையம் மூலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன, ஒரு சில விண்ணப்பங்களை தவிர அனைத்தும் உறுப்பினர்களால் இணைய வழியாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன, இது உறுப்பினர்களதும் செயற்குழுவினதும் செயற்பாடுகளை மிகவும் இலகுவாக்கியது.

**<u>தமிழ்க் கலாசாலை</u>**



எம்மிளம் சிறார்களுக்குத் தமிழ்மொழியோடு, கலைகளையும் கற்பிக்கும் நோக்கோடு நடாத்தப் படுகின்ற தமிழ்ப் பாடசாலையானது, நாட்டின் சட்ட ஒழுங்குகளுக்கு ஏற்ப தமிழ்க் கலாசாலை எனப் பெயர் மாற்றம் பெற்றது.

பதினைந்து சிறார்களுடன் வைமாரி சனசமூக நிலையத்தில் 2018-2019 கல்வியாண்டை ஆரம்பித்த கலாசாலை, தற்போது. முப்பதுக்கும் அதிகமான சிறார்களோடு, மேம்படுத்தப் பட்ட வசதிகளையுடைய வேறொரு வளாகத்தில் இயங்கி வருகின்றது. இதனைச் சாத்தியமாக்குகின்ற கலாசாலைச் சமூகம், பெற்றோர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றிகள் பற்பல.

2018 – 2019 கல்வியாண்டின் ஆரம்பத்தில் பெற்றோர், செயற்குழு உறுப்பினர்கள், கலாசாலை தொண்டாசிரியர்கள் பங்குபற்றிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது, இக்கலந்துரையாடலில் சிறார்களுக்கு அனுமதிப் படிவங்கள் வழங்கப்பட்டன, சிறார்களின் பெற்றோரின் தொடர்பு விபரங்களைப் பெறுவதே இதன் நோக்கமாக இருந்தது, அத்துடன் 2018-2019 ஆண்டுக்குரிய செயற்திட்டங்களை உள்ளடக்கிய கையேடு ஒன்றும் பெற்றோர்களுக்கு வழங்கப்பட்டது

இந்தக் கல்வியாண்டில் அழகுதமிழ் என்கிற உசாத்துணை நூலொன்று அச்சிடப்பட்டு, சிறார்களுக்கு வழங்கப் பட்டது. எனினும் கலாசாலையின் கல்விச் செயற்பாடுகள், இந்நூலுக்குள் மட்டுப்படுத்தப் படவில்லை. சிறார்கள் எழுத்துக்களையும், சொற்களையும் அறிவதற்குரிய ஒரு கையேடாகவே இது அமைகின்றது.



மேலும், தமிழ் நூலகம் ஒன்றை அமைப்பதற்காக உறுப்பினர்களின் ஆதரவைக் கோரியிருந்தோம். பல உறுப்பினர்கள் மனமுவந்து பல நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளார்கள்.

தற்போது, நூலடுக்கு ஒன்றை அமைக்கும் பணியில் உறுப்பினர்கள் சிலர் ஈடுபட்டுள்ளார்கள். இந்த நூலடுக்கு, கலாசாலையில் ஒரு பொது இடத்தில் வைக்கப் படவுள்ளது. வகுப்பு நேரத்தில், காத்திருக்கும் பெற்றோர் இந்நூல்களை வாசிக்க முடியும், வீட்டுக்கு எடுத்துச் செல்லவும் முடியும்.

அத்துடன், கலாசாலைக்கு நூல்களை அளிக்க விரும்புவோர், தமிழ்ச் சங்க நிகழ்ச்சிகளுக்காகக் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. நூல்களை நேரடியாக இந்நூலடுக்கில் வைக்க முடியும்.

கலாசாலை மேலும் விரிவடைய விரிவடைய, சிறார்களின் வகுப்பறை ஒழுக்கத்தைப் பேணுதல், கலாசாலை வளாகத்திலும் சுற்றுப்புறங்களிலும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துதல், சிறார்களைக் குழுக்களாகப் பிரித்தல், அனைவரையும் உள்ளடக்கி கலாச்சார நிகழ்வுகளைப் பயிற்றுவித்தல், அவர்களுக்கான பாடப் பரப்பை வரையறுத்தல், அவர்களது

முன்னேற்றத்தைப் பெற்றோருக்கு அறியப் படுத்தல் என்பன மிகவும் அவதானத்துடன், திட்டமிட்டு ஆற்ற வேண்டிய கருமங்களாக மாறியிருக்கின்றன.

தொண்டராசிரியர்களது கடமைகளை வரையறுத்து, அவர்களுக்குரிய பயிற்சிகளை வழங்கி, பெற்றோரினதும் சிறார்களினதும் பங்களிப்பை அதிகரித்து, கலாசாலைக்குரிய ஒழுக்கக் கோவையை உருவாக்கி, அதனை ஒரு கட்டுக்கோப்பான கலைக்கூடமாக மாற்றுவதற்கு மிகவும் உகந்த நேரம் இதுவெனலாம்.

- தமிழ்க் கலாசாலை ஒருங்கிணைப்பாளர்

**<u>மாவீரர் நினைவு நாள்</u>**



ஈழவிடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றி தாய்நாட்டுக்காகத் தமது இன்னுயிரை ஈந்த அனைவரையும் நினைவுகூருமுகமாக ஒழுங்கு செய்யப்படும் மாவீரர் நினைவுநாள் நிகழ்வில் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு தமது உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டார்கள். தாயகத்தில் கார்த்திகை 27 அன்று மாவீரர் தினம் அனுட்டிக்கப்படுகிறது, எமது தமிழ்ச் சங்கத்தில் அண்மைய காலங்களில் கார்த்திகை 27 ஐ அண்மித்து வருகின்ற வாரஇறுதி நாட்களில் அனுட்டிக்கப்பட்டு வந்த மாவீரர் தினமானது 2018 இல், கார்த்திகை 27 அன்றே அனுட்டிக்கப்பட்டது. இனிவரும் காலங்களிலும் இதனைத் தொடருமாறு வேண்டுகிறோம். இந்நிகழ்வில் முள்ளிவாய்க்கால் முற்றம் பற்றிய சிறு காணொளி காண்பிக்கப்பட்டது, இதனைத் தந்துதவிய திரு. வெங்கடராமன் அவர்களுக்கும் நன்றிகள்.

**<u>நிதிவரவு</u>**

சங்க நடவடிக்கைகளான வாராந்த தமிழ் வகுப்புகள் மற்றும் கலை கலாச்சார நிகழ்வுகளை நடத்துவதற்காக 3300 வெள்ளிகளை நிதியுதவியாக அளித்த கிறைஸ்ற்சேர்ச் நகரசபைக்கு (Christchurch City Council) எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அதனைவிட, மேலதிகமாக நன்கொடைகள் மற்றும் அங்கத்துவ கட்டணமும் இந்த வருட நிதிவரவில் சேர்க்கப்பட்டது. அங்கத்துவக் கட்டணத்தினைச் செலுத்தி உதவிய சங்க அங்கத்தவர்கள் மற்றும் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் சங்கம் சார்பாக நன்றிகளை இவ்விடத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

**<u>குருதிக் கொடை</u>**

எமது தமிழ்ச்சங்கம் NZ Blood அமைப்புடன் இணைந்து குருதிக்கொடை வழங்குவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்தது. பல உறுப்பினர்கள் தாமாகவே முன்வந்து குருதிக்கொடை வழங்கினார்கள், கடைசியாக பதியப்பட்ட தரவுகளின்படி 9 உறுப்பினர்கள் 36 தடவைகள் குருதிக்கொடை வழங்கி 108 பேருக்கு மீளுயிர் வழங்கி உள்ளார்கள். குறிப்பாக சங்க உறுப்பினர் திரு சபாபதி சுஜீவ்காந்த் அவர்கள் அதிக தடவைகள் குருதிக்கொடை வழங்கியுள்ளார், அவருக்கும் மற்றுமனைவருக்கும் மிக்க



நன்றிகள், இதனை நீங்கள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## விளையாட்டுத்துறை

### சிநேகபூர்வமான துடுப்பாட்ட மற்றும் ஒன்றுகூடல் நிகழ்வு



கடந்த 23.09.2018 அன்று எமது தமிழ்ச் சங்கத்திற்கும் டநீடின் தமிழ்ச் சங்கத்திற்கும் (Dunedin Tamil Society) இடையிலான சிநேகபூர்வமான துடுப்பாட்ட மற்றும் ஒன்று கூடல் நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது, இது நியூசிலாந்து நாட்டின் தென்தீவின் இரண்டு பெரிய நகரங்களில் வாழும் தமிழர்கள் ஒன்றுகூடுவதற்கு மிகப்பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது, இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக அமைந்தது என்று சொல்லுவது மிகையாகாது.

இது ஒரு துடுப்பாட்ட நிகழ்ச்சியாக மட்டுமல்லாது இரண்டு சங்க உறுப்பினர்களுக்கு இடையேயான பல்சுவை ஒன்று கூடல் நிகழ்ச்சியாக மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பங்கு கொண்ட அனைத்து உறுப்பினர்களிற்கும், சரித்திர பூர்வமான இந்நிகழ்வின் முதலாவது கிண்ணத்தைச் சுவீகரித்த எமது தமிழ்ச் சங்க விளையாட்டு வீரர்களுக்கும், இந்த நிகழ்ச்சியை சிறப்புடன் நடத்த ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது சிரம் தாழ்ந்த நன்றிகள்,

இரண்டு சங்க நிர்வாக குழுவினரும், விளையாட்டுத் தலைவர்களும் இணைந்து இந்தக் கிண்ணத்துக்கு 'CTS - DTS United Trophy ' எனப் பெயர் வழங்கினார்கள், இந்த வருடம் முதல் இவ்வொன்றுகூடல் மற்றும் துடுப்பாட்ட நிகழ்வினை ஆண்டு தோறும் நடாத்த முடிவு செய்யப்பட்டது.

### தமிழர் பாரம்பரிய விளையாட்டு போட்டி



இம்முறையும் சங்க உறுப்பினர்களின் முழு ஆதரவோடும் பங்களிப்போடும் தமிழர் பாரம்பரிய விளையாட்டு போட்டி சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்ட சங்க உறுப்பினர்கள் அனைவரும் திரு பார்த்திபன், திருமதி லோஜினா மற்றும் திரு சிவகுமாரன், திருமதி ராதிகா தலைமையில் முறையே மஞ்சள் மற்றும் சிவப்பு அணிகளாகப் பிரிக்கப்பட்டு, போட்டிகள் நடைபெற்றன. இறுதியில் சிவப்பு அணி வெற்றிபெற்று முதல் இடத்தைத் தக்கவைத்துக்கொண்டது. இந்தப் போட்டிகளில் அனைவரும் மிகவும் உற்சாகத்துடனும் விறுவிறுப்புடனும் கலந்துகொண்டு நிகழ்வை மேலும் மெருகேற்றியது

குறிப்பிடத்தக்க அம்சமாகும். பல்வேறு வழிகளில் உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். இம்முறை முதல் முதலாக இரண்டு அணிகளும் தமக்கான வீடுகளை தமது அணிகளின் நிறங்களால் அலங்கரித்து இருந்தமை இன்னுமோர் சிறப்பாகும்.

வழமைபோன்று இம்முறையும் முட்டியை வழங்கி உதவிய திரு எடிசன் அவர்களுக்கு எமது நன்றிகளை இவ்விடத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். ஆனால் நேரமின்மை காரணமாக இம்முறை முட்டி உடைத்தல் நிகழ்வு நடைபெறவில்லை.

அதைவிட, தமிழ் பாரம்பரிய விளையாட்டு மற்றும் நத்தார் சுற்றுலா ஆகிய நிகழ்வுகளில் போது பார்பிக்யூ (BBQ) இயந்திரத்தை அதற்குரிய எரிவாயுவுடன் தந்துதவிய திரு ஞானசுகாதிபன் அவர்களிற்கு எமது நன்றிகள்.

## சங்க வலைத்தளம், சமூக வலைத்தளம் மற்றும் புகைப்பட உதவிகள்

சங்கத்தின் நிகழ்வுகள் சங்க வலைத்தளத்தில், உடனடியாக பதிவேற்றம் செய்யப்பட்டு எப்பொழுதும் மேம்படுத்தப்பட்ட தளமாக இயங்கிவருகிறது. சங்கத்தின் நிகழ்வுகளை புகைப்படங்களாகவும் காணொளிகளாகவும் பதிவுசெய்து வழங்கி உதவிய திரு கலைமாறன் மற்றும் திரு நிவேதனன் ஆகியோரிற்கு சங்கத்தின் சார்பாக எமது நன்றிகள்.

இத்துடன் எமது நிகழ்வுகளில் ஒளித்தொகுப்புகள் உடனுக்குடன் YouTube தளத்தில் தரவேற்றப்பட்டு வருகிறன. இதனைவிட சங்கத்தின் நிகழ்வுகள் முகநூல் பக்கத்தினுடாக அறிவிக்கப்பட்டுவருகிறது. இதன்மூலம் சங்கத்தின் நிகழ்வுகள் கிறைஸ்ற்சேர்ச்சிலும் அயல் நகரங்களிலுமுள்ள தமிழ் மக்களை சென்றடைகின்றன. இதனால் நிகழ்வுகளில் பங்குபற்றுவர்களின் தொகையும் கணிசமாக அதிகரித்துள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

## இதர விடயங்கள்

இன்று புதிய செயற்குழு அங்கத்தவர்களாக தெரிவுசெய்யப்படவுள்ள அனைவருக்கும், 2018/2019 ஆம் ஆண்டு செயற்குழு சார்பில் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். புதிய செயற்குழு மிகவும் செயலூக்கத்துடன் செயற்பட்டு, எமது செயற்குழுவின் நிர்வாகத்தில் குறைகள் இருப்பின் அதனை நிவர்த்தி செய்து சிறப்பான மேநிலைக்கு சங்கத்தினை கொண்டுசெல்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

இறுதியாக, தமிழ்ச் சங்கத்தின் நிகழ்வுகள் மற்றும் செயற்பாடுகளை நடத்த பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்கியோர், இந்நிகழ்வுகளின் போது ஒலி, ஒளியமைப்பு உதவிகள் புரிந்த சங்க உறுப்பினர்கள், அரங்க நிகழ்வுகளின் இறுதியில் அரங்கை மீள் ஒழுங்குசெய்தல், அரங்கை துப்பரவு செய்தல் குப்பைகளை பங்கிட்டு அகற்றுதல் போன்றவற்றில் உதவிய அனைவருக்கும் எமது 2018/2019 ஆம் ஆண்டு செயற்குழு சார்பில் மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

“வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே”